# திருக்குறளில் வண்ணக் கோட்பாடு

**ப.திருஞானசம்பந்தம் / P. Tirunjanasambantham***
தமிழ் உயராய்வு மையம் / Centre for Higher Tamil Studies
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை / Mannar Tirumalai Naikkar College, Madurai
thirumtnc7@gmail.com

Manuscript received 15 April 2021
Manuscript accepted 1 June 2021
*Corresponding author/First Author

## Abstract

Rhythmical feature (Vannam) refers to the sound variation of the 'pa'. The elements of 'pa' such as letter, syllable, and tune (Seer) form the basis of all syllables. The letters and sounds of words such as Kuril, Nedil, Vallinam, Mellinam, Idayinam, Alapedai, Kuriyalikaram, Kurtiyalukaram, etc cause differentiations in sounds of 'pa'. Tamil grammars present two different perspectives on Rhythmical feature. Tolkappiyam says that there are Rhythmical feature. Avinayam, Yapparungala Viruthiyurai and the text/lecture of the professor represent one hundred Rhythmical feature. M. Shanmugam Pillai remarks that there are plenty of references on Rhythmical feature that are said by Tolkappiyar in *Thirukkural* which appeared during the Sangam period. The present paper aims to evaluate the concept of Rhythmical Feature introduced by M.Shanmugam Pillai in one of the Tamil epic treatise, *Thirukkural*.

**Keywords**: Tolkappiyam, Tolkappiyar, Avinayam, Yapparungala Viruthiyurai, Thirukkural, Sound echoes, Rhythmical feature.

### ஆய்வுச்சுருக்கம்

வண்ணம் என்பது பாவின் ஓசை வேறுபாட்டைக் குறிக்கிறது. பாவின் உறுப்புகளான எழுத்து, அசை, சீர் என்பன எல்லாப் பாக்களுக்குமான ஓசைகளுக்கு அடைப்படையாக அமைகின்றன. குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், அளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம் முதலிய எழுத்துகள் பாக்களில் ஓசை வேறுபாட்டை உருவாக்கக் காரணமாகின்றன. வண்ணங்கள் குறித்து தமிழ் இலக்கணங்கள் இரு வேறுபட்ட கருத்தினை முன்வைக்கின்றன. வண்ணங்கள் இருபது எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. அவிநயம், யாப்பருங்கல விருத்தியுரை, பேராசிரியர் உரை ஆகியன வண்ணங்கள் நூறு எனக் குறிப்பிடுகின்றன. சங்க காலத்தையொட்டி தோன்றிய திருக்குறளுள் தொல்காப்பியர் கூறும் வண்ணங்களே மிகுதியாக உள்ளன என்கிறார் மு.சண்முகம் பிள்ளை. திருக்குறளில் உள்ள வண்ணங்கள் குறித்த மு.சண்முகம் பிள்ளையின் ஆய்வை மதிப்பிடுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கருச்சொற்கள்:** தொல்காப்பியம், தொல்காப்பியர், அவிநயம், யாப்பருங்கல விருத்தியுரை, திருக்குறள், ஓசை வேறு, வண்ணக் கோட்பாடு

### முன்னுரை

வண்ணம் என்பது பாவின் ஒசை வேறுபாட்டைக் குறிப்பதாகும். பாவின் உறுப்புகளாக வருகின்ற எழுத்து, அசை, சீர் என்பன எல்லாம் பாவிற்குரிய ஓசைக்கு அடிப்படையாகும். குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், அளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம் முதலிய எழுத்துகள் எல்லாப் பாக்களிலும் ஓசை வேறுபாட்டை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றன. திருக்குறளின் குறள்வெண்பாக்களில் இடம்பெறும் வண்ணங்களை ஆராய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. மு.சண்முகம் பிள்ளை அவர்கள் *"திருக்குறள் யாப்பு அமைதியும்*

*பாடவேறுபாடும்"* என்னும் ஆய்வு நூலின் ஒரு பகுதியாகத் திருக்குறளின் வண்ணங்கள் குறித்து ஆராய்ந்துள்ளார். அதனை அடியொற்றி இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுநெறிமுறைகள்**

திருக்குறளில் இடம்பெற்றுள்ள வண்ணக் கோட்பாடு குறித்து ஆராயும் இக்கட்டுரை, முந்தைய ஆய்வுகளைத் தொகுத்து விளக்குகையில் விளக்கமுறைத் திறனாய்வினை அடியொற்றுகிறது. தொல்காப்பியம் முன்வைக்கும் இருபது வண்ணங்கள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளனவாக எனப் பகுத்துப் பார்க்கையில் பரிசோதனை முறைத் திறனாய்வினையும் அடிப்படையாகக் கொண்டமைகின்றது.

**ஆய்வுத் தரவுகள்**

திருக்குறள் முழுமையும், தொல்காப்பியம், அவிநயம், யாப்பருங்கலம் ஆகிய நூல்கள், உரைகள் குறிப்பிடும் வண்ணக் கோட்பாடுகள் தொடர்பான கருத்துகள் முதன்மைத் தரவுகளாக அமைகின்றன. வண்ணங்கள் குறித்த யாப்பியல் ஆய்வாளர்களின் ஆய்வு நூல்கள் துணைமைத் தரவுகளாக அமைகின்றன.

**தமிழ் இலக்கண நூல்களும் உரைகளும் சுட்டும் வண்ணங்கள்**

வண்ணங்கள் குறித்து இருவேறு கருத்து நிலைகள் தமிழிலக்கண வரலாற்றில் சுட்டப்படுகின்றன.

1. வண்ணங்கள் இருபது
2. வண்ணங்கள் நூறு

தொல்காப்பியர் தனக்கு முன்பிருந்த இலக்கணிகளின் கூற்று அடிப்படையில் வண்ணங்கள் இருபது வகைப்படும் என்று வரையறுத்துள்ளார். இதை,

*'வண்ணம் தாமே நாலைந்து என்ப'* *(தொல்.பொருள்.செய்.நூ.212)*

என்னும் நூற்பாவின் வழி அறியலாம். இருபது வண்ணங்கள் எவையெவை என்பதை அடுத்துவரும் நூற்பாவில் தொல்காப்பியர் (தொல்.பொருள்.செய். நூ.213) பட்டியலிடுகின்றார். அவை பாஅ வண்ணம், தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் ஆகியன.

தொல்காப்பியரின் கருத்தைக் கையனார் அப்படியே பின்பற்றினார். இவரோடு பிற்கால இலக்கண நூல்களான வீரசோழியம், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியன வண்ணத்தை இருபது என்றே சுட்டுகின்றன. இடைக்கால யாப்பிலக்கணிகளுள் ஒருவரான அவிநயனார் வண்ணத்தை நூறு வகைகளாகப் பகுத்தார்.

வண்ணத்தைத் தொகையான் ஐந்தாகவும், வகையான் இருபதாகவும், விரியான் நூறாகவும் விரித்து உரைத்தார். விருத்தியுரைகாரர், பேராசிரியர் நூற்றிருபதற்கும் மேலே உறழ்ந்து பெருக்குவதால் உண்டாகுகின்ற வண்ணப் பாகுபாட்டைக் கூறியுள்ளார். இவ்வாறு இருபதுக்கு மேலாகப் பகுப்பினும், தொல்காப்பியரின் வண்ணப் பாகுபாடே அடிப்படையானது; ஒரு வண்ணத்திலிருந்து பிறிதொரு வண்ணத்தை வேறுபடுத்தக்கது (பிச்சை, பக்.322).

இக்கருத்து அவிநயனார், விருத்தியுரைகாரர், பேராசிரியர் ஆகியோர் வண்ணத்தை நூறு என்று பகுத்துக் கூறினாலும், தொல்காப்பியரின் வகைப்பாடே வண்ணக் கோட்பாட்டிற்கு அடிப்படையானதாகவும் பின்பற்றத் தக்கதாகவும் அமைந்ததை உறுதிபடுத்துகின்றது.

திருக்குறளின் யாப்பியலை முழுதும் ஆராய்ந்த மு.சண்முகம் பிள்ளை தொல்காப்பியர் கூறும் இருபது வண்ணங்களில் தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம்,

அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், ஏந்தல் வண்ணம் ஆகிய பதினாறு வண்ணங்கள் மட்டுமே திருக்குறளில் இடம்பெற்றுள்ளன (திருக்குறளின் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், பக்.68 - 79). திருக்குறளில் உள்ள வண்ணங்கள் குறித்த மு.சண்முகம் பிள்ளையின் ஆய்வை மதிப்பிடுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**தாஅ வண்ணம்**

இது தாவி வரும் வண்ணமாகும். அஃதாவது இடையீடுபடத் தொடுக்கப்படும். இதனைத் தொல்காப்பியர் *'தாஅவண்ணம், இடையிட்டு வந்த எதுகைத் தாகும்' (தொல்.பொருள்.செய்.நூ.215)* என்கிறார். ஆ.பழநியாண்டி தாஅ வண்ணம் பயிலும் முறையினை எளிதாகக் குறிப்பிடுகின்றார். "தவளை பாய்ந்தாற் போன்று ஓரடிவிட்டு ஓரடியில் தாவியமைந்த எதுகை உடையமையால் தாஅ வண்ணம் எனப்பட்டது" (தொல்காப்பிய வண்ணங்கள், பக்.17).

பாடலின் அடிகளில் சீரிடையீடுபடத் தொடுக்கப்படும் தொடையாகப் பொழிப்பும் ஒரூஉம் அமைந்துள்ளன. இவ்வகைத் தொடைகளைப் பெற்று வருகின்ற அமைப்பைத் தாஅ வண்ணமாகக் கொள்ளலாம். சான்றாகத் தாஅ வண்ணத்தில் அமைந்த குறள் வெண்பாக்கள் பின்வருமாறு:

(எ - டு)

*தா**ளா**ண்மை இல்லாதான் வே**ளா**ண்மை பேடிகை*
*வாளாண்மை போலக் கெடும்.* *(குறள்.614)*
*மு**யற்**சி திருவினை ஆக்கும் மு**யற்**றின்மை*
*இன்மை புகுத்தி விடும்.* *(குறள்.616)*

முதல் குறளில், பொழிப்பு எதுகைத் தொடை (தாளாண்மை, வேளாண்மை) அடிப்படையில் தாஅ வண்ணம் இடம்பெற்றுள்ளது. இரண்டாவது குறளில் ஒரூஉ எதுகை (முயற்சி, முயற்றின்மை) அமைந்த நிலையில் தாஅ வண்ணம் இடம்பெற்றுள்ளது. திருக்குறளில் பொழிப்பு எதுகையும், ஒரூஉ எதுகையும் பெற்று வரும் குறள்வெண்பாக்கள் அனைத்தும் தாஅ வண்ணத்தில் அமைந்தவையாகும். 1330 திருக்குறளில் பொழிப்பு எதுகை 18 இடங்களிலும், ஒரூஉ எதுகை 428 இடங்களிலும் பயின்றுவந்துள்ளன (திருஞானசம்பந்தம், பக்.564 & 565). ஆக மொத்தம் தாஅ வண்ணத்தில் அமைந்த குறள்வெண்பாக்கள் 446 ஆகும்.

**வல்லிசை வண்ணம்**

வல்லெழுத்துகள் ஆறும் மிகுதியாகப் பயின்று வருவது வல்லெழுத்து வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'வல்லிசை வண்ணம் வல்லெழுத்து பயிலும்' (தொல்.பொருள். செய்.நூ.216)* என்கிறார். வல்லிசை, மெல்லிசை வண்ணங்களுக்குத் தொல்காப்பியர் பெயர் வைத்த முறையினை நுட்பமாகப் பழநியாண்டி மதிப்பிட்டுரைத்துள்ளார். "தொல்காப்பியர் வண்ணத்திற்கும் இசைக்குமுள்ள தொடர்பை வலியுறுத்தும் வகையில் வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் எனப் பெயரிட்டுள்ளார்" (தொல்காப்பிய வண்ணங்கள், பக். 21 & 22) என்கிறார்.

(எ - டு)

*போற்றின் அரிவை போற்றல் கடுத்தபின்*
*தேற்றுதல் யார்க்கும் அரிது.* *(குறள்.693)*

இக்குறளில் வல்லின எழுத்துக்கள் மிகுதியாகப் பயின்று வல்லிசை வண்ணமாக உள்ளது.

**மெல்லிசை வண்ணம்**

மெல்லெழுத்துகள் ஆறும் மிகுதியாகப் பயின்று வருவது மெல்லிசை வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே' (தொல்.பொருள்.செய்.நூ.217)*

என்கிறார். க.வெள்ளைவாரணர் “ஒரு செய்யுள் முழுதும் ஓரின எழுத்து பயின்றுவரச் செய்தல், கேட்போர்க்கு இன்னாவோசைத்தாகும். ஆதலால் அங்ஙனம் ஓரின எழுத்தே முழுதும் வராது, உறுப்பாய எழுத்துகள் இடையிடையே மிக்கும் பலவாய் வரும்” (தொல்.செய்.நூ.217 ஆய்வுரை அடிக்குறிப்பு) எனச் சுட்டுகிறார். ஒரே மெல்லின எழுத்தாக மட்டுமல்லாமல், மெல்லின எழுத்துகளுள் எவை வேண்டுமானாலும் பயின்று வந்தாலும் அதை மெல்லிசை வண்ணமாகக் கொள்ளலாம் என்று மெல்லிசை வண்ணத்திற்கு அருமையான விளக்கத்தைத் தருகின்றார்.

(எ - டு) *இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னதா தது.* *(குறள்.1041)*

இக்குறளில் பெரும்பான்மை மெல்லின எழுத்தே மிகுந்து வந்து மெல்லிசை வண்ணமாக உள்ளது.

**இயைபு வண்ணம்**

இடையெழுத்துகள் ஆறும் மிகுதியாகப் பயின்று வருவது இயைபு வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் ‘*இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே’ (தொல்.பொருள். செய்.நூ.218)* என்கிறார். பேராசிரியர் “மென்மை வன்மைக்கு இடை நிகரவாகிய எழுத்தான் வருதலின் இயைபு வண்ணம்” என்று இயைபு வண்ணத்திற்குத் தனி விளக்கத்தைத் தருகிறார்.

(எ - டு) *சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்.* *(குறள்.664)*

இக்குறளில் பெரும்பான்மை இடையின எழுத்துகள் மிகுந்து வந்து இயைபு வண்ணமாக உள்ளது. ஆ.பழனியாண்டி திருக்குறளில் உள்ள ஊக்கமுடைமை அதிகாரத்தின் 6ஆவது குறள்வெண்பாவைச் சான்றுகாட்டி, இயைபு வண்ணத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

(எ - டு) *உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது*
*தள்ளினும் தள்ளாமை நீர்த்து.* *(குறள்.576)*

இக்குறள்வெண்பாவில் யகர, ளகர, வகர எனும் இடையின ஒற்றுக்கள் பயின்று வந்தாலும் ளகர ஒற்றின் கையே ஓங்கி உள்ளது. உரிய ஓசையைத் தாங்கி உள்ளது என்ற சிறப்பான விளக்கத்தையும் சான்றினையும் பழநியாண்டி முன்வைக்கின்றார் (தொல்காப்பிய வண்ணங்கள், பக்.28). இச்சான்றுகள், விளக்கத்தின் மூலம் இடையின ஒற்றுகள் மிகுதியாகச் செய்யுளியலில் பயின்றால் அது இயைபு வண்ணமாகும்.

**அளபெடை வண்ணம்**

அளபெடை எழுத்துகள் பெற்று வரும் வண்ணம் அளபெடை வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் ‘*அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்’ (தொல். பொருள்.செய்.நூ.219)* என்கிறார். இந்நூற்பாவிற்கு உரையெழுதிய பேராசிரியரும் நச்சரும் உயிரளபெடை, ஒற்றளபெடை என்னும் இரண்டு அளபெடைகளும் அளபெடை வண்ணத்திற்குரியன என்கின்றனர்.

(எ - டு) *உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்*
*செறாஅய் வாழிய நெஞ்சு.* *(குறள்.1200)*

இக்குறளின் முதலிரண்டு அடிகளின் முதற்சீரில் அளபெடை பயின்று வந்து அளபெடை வண்ணமாக உள்ளது.

உயிரெழுத்து அளபெழுந்து வருகின்ற 27 உயிரளபெடை பெற்ற குறள்வெண்பாக்கள் திருக்குறளில் உள்ளன. ஆனால் ஒற்றளபெடையைப் பெற்றுவரும் குறள்வெண்பாக்கள் திருக்குறளில் இல்லை என்று மு.சண்முகம் பிள்ளை ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார் (திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், பக்.71).

ஆ.பழனியாண்டி "அளபெடை வண்ணம் ஓசை நயம் பற்றியது மட்டுமல்லாது அது பொருளில் அழுத்தம், நிறைவு, உறுதி முதலியவற்றை விளக்கி வருவது" என்கிறார். திருக்குறளில் 98 இடங்களில் அளபெடைத் தொடை பயின்றுள்ளது. அவற்றுள் 25 குறள்வெண்பாக்களில் 2 முறை அளபெடை வருகிறது. ஆக 123 இடங்களில் அளபெடைத் தொடைகளைத் திருவள்ளுவர் அமைந்துள்ளார் (தொல்காப்பிய வண்ணங்கள், பக். 32).

மு.சண்முகம் பிள்ளை குறள் எண்ணிக்கையின் மூலம் உயிரளபெடைத் தொடையினைக் கூற, ஆ.பழநியாண்டி ஒரே குறளில் ஒன்றிற்கும் மேற்பட்ட நிலையில் அளபெடைத் தொடை பயில்வின் எண்ணிக்கையை மதிப்பிட்டுரைத்துள்ளார்.

## நெடுஞ்சீர் வண்ணம்

நெட்டெழுத்து மிகுதியாகப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்'* (தொல். பொருள்.செய்.நூ.220) என்கிறார். ஆ.பழநியாண்டி, "தொல்காப்பியர் இதனை நெடில் வண்ணமென்றோ, நெட்டெழுத்து வண்ணமென்றோ பெயரிடாது நெடுஞ்சீர் வண்ணம் என்றது ஏன்? நெட்டெழுத்துச் சீர் தொறும் வருவதினும் சீராக வரலே சிறப்பாகும் என்பதே காரணம்" (தொல்காப்பிய வண்ணங்கள், பக்.34, 35) என்கிறார். நெடுஞ்சீர் வண்ணத்திற்கு விளக்கம் கொடுக்கும்போது தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியர்கள் மூவரும் நெட்டெழுத்து பயின்று வருவது என்று கூறுகின்றனர்.

(எ - டு) *யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பாட்டு.* *(குறள்.127)*

இக்குறளில் பெரும்பான்மை நெட்டெழுத்தே மிகுந்து வந்து நெடுஞ்சீர் வண்ணமாக உள்ளது.

## குறுஞ்சீர் வண்ணம்

குற்றெழுத்து மிகுதியாகப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்'* (தொல்.பொருள். செய்.நூ.221) என்கிறார். தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர் இருவரும் குற்றெழுத்து பயில்வது என்று குறுஞ்சீர் வண்ணத்தை வரையறுக்க, நச்சினார்க்கினியர் குற்றெழுத்து மிகுதியாக வருவது என்று நுட்பமான விளக்கத்தைத் தருகின்றார்.

(எ - டு) *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.* *(குறள்.127)*

இக்குறளில் பெரும்பான்மை குற்றெழுத்தே மிகுந்து வந்து குறுஞ்சீர் வண்ணமாக உள்ளது.

## சித்திர வண்ணம்

நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் விரவி வருவது சித்திர வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'சித்திர வண்ணம் நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே' (தொல். பொருள். செய்.நூ.222)* என்பார். க.வெள்ளைவாரணர் "ஓவியம்போல பல வண்ணம் பொருந்தச் செய்யப்படுதலின் சித்திர வண்ணம் எனப் பெயர்த்தலாயிற்று" (தொல்.செய்.நூ.222 ஆய்வுரை) என்ற அழகான விளக்கத்தைத் தருகின்றார்.

(எ - டு) *யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்*
*யாரினும் யாரினும் என்று.* *(குறள்.1094)*

இக்குறளில் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் கலந்து வருவதால் இது சித்திர வண்ணமாகும்.

**நலிபு வண்ணம்**

நலிபு என்னும் சொல்லுக்கு ஆய்தம் என்று பொருள். ஆய்தவெழுத்துகள் பயின்று வருவது நலிபு வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்' (தொல்.பொருள். செய்.நூ.223)* என்பார்.

(எ - டு) *அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்.* *(குறள்.178)*

இக்குறளில் முதலடியின் முதற்சீரிலும் நான்காம் சீரிலும் ஆய்த எழுத்து பயின்று வந்து நலிபு வண்ணமாயிற்று. மேற்சுட்டிய குறட்பாவையே தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியர்கள் இளம்பூரணரும், பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் சான்றுகாட்டுகின்றனர். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறள் முழுவதையும் காட்ட, பேராசிரியர் முதலடியினை மட்டும் சான்று காட்டுகின்றார். இளம்பூரணர், பேராசிரியர் இருவரும் அடியின் சீர்க்குள் மட்டும் ஆய்த எழுத்துப் பயிலும் வகையில் நலிபு வண்ணத்திற்குச் சான்றுகாட்டுகின்றனர். நச்சினார்க்கினியர் சீர்க்குள் மட்டுமல்லாது அடிக்குள்ளும் ஆய்த எழுத்து பயின்று நலிபு வண்ணமாய் அமையும் சான்றினைத் தருகின்றார். இதன்மூலம் நலிபு வண்ணம் என்பது அடியின் சீருக்குள்ளும் இரண்டு அடிகளுக்குள்ளும் பயின்று வரும் என்பது தெளிவாகின்றது. திருக்குறளில் இவ்வாறு அமையும் குறட்பாக்கள் உள்ளன.

(எ-டு) அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். (குறள்.175)

இக்குறளில் இரண்டு இடங்களில் ஆய்தம் பயின்றுள்ளது. இது தவிர இக்குறள் பயிலும் வெஃகாமை என்ற அதிகாரத்தில் 13 இடங்களில் ஆய்தம் பயின்றுள்ளன.

**அகப்பாட்டு வண்ணம்**

தொல்காப்பியர் *'அகப்பாட்டு வண்ணம், முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே' (தொல். பொருள்.செய்.நூ.224)* என்பார். இந்நூற்பாவிற்கு விளக்கந் தரும் பேராசிரியர் ''அகப்பாட்டு வண்ணம் என்பது இறுதியடி இடையடி போன்று நிற்பது என்றவாறு. அவையாவன: முடித்துக்காட்டும் ஈற்றசை ஏகாரத் தானன்றி ஒழிந்த உயிரீற்றானும் ஒற்றீற்றானும் வருவன'' என்கிறார். க.வெள்ளைவாரணர் செய்யுள் ஓசை முடிவு பெறாதது போன்ற தன்மையதாய்ப் பொருள் முடிந்து வருவது என்கிறார் (நூ. 224 ஆய்வுரை).

(எ - டு) *நனவினால் நல்கா தவரைக் கனவினால்*
*காண்டலின் உண்டென் உயிர்.* *(குறள்.1213)*

இக்குறளின் இறுதியடி முடிந்ததுபோல் முடியாத் தன்மையில் ஒற்றீற்றான் அமைந்திருப்பதால் இது அகப்பாட்டு வண்ணம்.

**புறப்பாட்டு வண்ணம்**

அகப்பாட்டு வண்ணத்திற்கு நேர் மாறானது புறப்பாட்டு வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'புறப்பாட்டு வண்ணம், முடிந்தது போன்று முடியா தாகும்' (தொல்.பொருள். செய்.நூ.225)* என்கிறார்.

இந்நூற்பாவிற்கு விளக்கந் தருகையில் போராசிரியர், ''புறப்பாட்டு வண்ணம் என்பது இறுதியடிப் புறத்ததாகவும் தான் முடிந்தது போன்று நிற்றல்'' என்பார். அதாவது செய்யுள் முடிநிலையிலும் அதனாற் சொல்லக் கருதிய பொருள் செய்யுளின் புறத்தேயும் விரிந்து நிற்பது போன்ற அமைந்த ஓசைத்திறம் புறப்பாட்டு வண்ணமாகும் என்று விளக்கந் தருகிறார் வெள்ளைவாரணர் (நூ.225 அடிக்குறிப்பு).

(எ - டு) *புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்.* *(குறள்.785)*

'அகப்பாட்டு வண்ணமும் புறப்பாட்டு வண்ணமும் நெடும் பாடல்களுக்கு மிகவும் அவசியமாகும். குறட்பாவோ அங்ஙனமன்று. பெரும்பான்மையும் கருத்துகள் சிறுதொடர்களாவே அமைந்து விடுகின்றன. ஒரு சில பாடல்களில் வினை முடிபாகச் சில சொல் வருவித்து உரைக்க வேண்டும் நிலைமையும் உண்டு'.

(எ - டு) *கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.* *(குறள்.981)*

இங்கே என்ப என்பதற்கு ஏற்ற முடிபுச் சொல்லாக, 'என்று சொல்லுவர் நூலோர்' எனப் பரிமேலழகர் 'நூலோர்' என்னும் சொல்லை வருவித்து முடிபு காட்டுகின்றார். இது போன்றவற்றைப் புறப்பாட்டு வண்ணம் என்று ஏற்றுக்கொள்ளுதலும் அமைவுடைத்தாகும்' (திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், பக்.74&75)

என்று மு.சண்முகம் பிள்ளை புறப்பாட்டு வண்ணம் குறித்துக் கூறும் கருத்து ஏற்றுக்கொள்ளதக்கது.

**ஒழுகு வண்ணம்**

ஒழுகிய ஓசையால் நடந்து வருவது ஒழுகு வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்' (தொல்.பொருள்.செய்.நூ.225)* என்பார். க.வெள்ளைவாரணர் ஆற்றொழுக்குப் போல தொடர்ந்து வருவது என்கிறார். ஒழுகியவோசையென்பது இயற்சீரும் வெண்சீரும் கலந்து வரும் ஒழுகிசைச் செப்பலோசையைக் குறிக்கும். திருக்குறளில் ஒழுகிசைச் செப்பலோசையில் வருகின்ற குறள்கள் அனைத்தையும் இவ்வண்ணத்திற்கு உரியதாகச் சுட்டலாம். "ஒழுகிசைச் செப்பலோசையை 1229 குறட்பாக்கள் பெற்றுள்ளன" (திருஞானசம்பந்தம், பக்.243).

(எ - டு) *உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்.* *(குறள்.1033)*

இக்குறள்வெண்பா இயற்சீரும் வெண்சீரும் கலந்த ஒழுகிசைச் செப்பலோசையில் உள்ளதால ஒழுகு வண்ணம்.

**ஒரூஉ வண்ணம்**

தொல்காப்பியர் *'ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்' (தொல்.பொருள்.செய்.நூ.227)* என்பார். இந்நூற்பாவிற்கு விளக்கந் தரும் பேராசிரியர், 'யாற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதொன்றனை அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉ வண்ணம்' என்கிறார். "ஒரூஉ வண்ணம் நீங்கின தொடையான் கிடப்பது. அது செந்தொடையாம்" என்பார் ச.வே.சுப்பிரமணியன் (தொல்காப்பியம் தெளிவுரை, நூ.1483).

(எ - டு) *முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
*அகநக நட்பது நட்பு.* *(குறள்.786)*

இக்குறள் ஆற்றொழுக்காக அமைந்துள்ளதால் ஒரூஉ வண்ணமாகும்.

**எண்ணு வண்ணம்**

தொல்காப்பியர் *'எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்' (தொல்.பொருள். செய்.நூ.228)* என்கிறார். எண்ணு வண்ணம் செவ்வெண்ணினாலும், 'உம்'மை எண்ணினாலும், 'என' வெண்ணினாலும், 'என்றா' எண்ணினாலும், பிறவும் யாதானுமோர் எண்ணினாலும் வரப் பெறும் என்கிறார் மு.சண்முகம் பிள்ளை. (திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், பக்.76). வண்ணத்திற்குப் பெயரிடுவதில் இசை நயத்திற்கே முதலிடம் தந்துள்ளார் தொல்காப்பியர் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. ஈண்டும் எண்ணு வண்ணமும் அதுபோல்வதே ணகர ஈற்றுப் பெயர் உகரச் சாரியை பெற்று எண்ணு என வழங்கலாயிற்று என்று எண்ணு வண்ணத்திற்கு விளக்கம் தருகிறார் க.வெள்ளைவாரணர் (நூ.76 அடிக்குறிப்பு).

(எ - டு) *உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்.* *(குறள்756)*

இக்குறள்வெண்பா 'உம்' எனும் எண்ணினால் அமைந்திருப்பதால் எண்ணு வண்ணம்.

**அகைப்பு வண்ணம்**

விட்டு விட்டுச் சேறலும் எதிர் மொழிதலும் அகைப்பு வண்ணமாகும். இதைத் தொல்காப்பியர் *'அகைப்பு வண்ணம் அறுத்தறுத்துத் தொழுகும்' (தொல்.பொருள்.செய்.நூ.229)* என்பார். இவ் அகைப்பு வண்ணத்திற்குப் பேராசிரியர் விளக்கந் தருகையில் நெடிலும் குறிலுமாய் அறுத்தறுத்து வரும் குறுந்தொகை பாடலைச் சான்றுகாட்டுவார்.

வாரா ராயினும் வரினும் அவர்நமக்கு
யாரா கியரோ தோழி (குறுந்.10)

இச்சான்றின் வழி, நெடில் எழுத்தும், குறில் எழுத்தும் தொடர்ந்தும் விட்டுவிட்டும் செய்யுளில் பயின்று வருவது அகைப்பு வண்ணமாகும். பேராசிரியர் காட்டும் சான்றினை எடுத்துக் கொண்டு அகைப்பு வண்ணத்தை விளக்கும் வெள்ளைவாரணர். 'வாரா ராயினும்' என ஒரு வழி நெடிலும் 'வரினும்' என ஒரு வழிக் குறிலும் பயின்று ஓசை அறுத்து நிற்றலின் அகைப்பு வண்ணமாயிற்று என்கிறார் (நூ.229 அடிக்குறிப்பு).

(எ - டு) *தேறினும் தேறா விடினும் அறிவின்கண்*
*தேறான் பகாஅன் விடின்.* *(குறள்.376)*

இக்குறள்வெண்பாவில் 'தேறினும் தேறா' என ஒரு வழி நெடிலும், 'விடினும் அறிவின்கண்' என ஒரு வழிக் குறிலும் பயின்று அகைப்பு வண்ணமானது.

**ஏந்தல் வண்ணம்**

சொல்லுகின்ற சொல்லினால் சொல்லப்படும் பொருள் சிறப்பச் செய்வது ஏந்தல் வண்ணமாகும். இதனைத் தொல்காப்பியர் *'ஏந்தல் வண்ணம் சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்' (தொல்.பொருள். செய்.நூ.231)* என்பார். இந்நூற்பாவை விளக்கும் இளம்பூரணர் 'ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லினாலே சொல்லப்பட்டது சிறக்க வரும்' என்கிறார். ச.வே.சுப்பிரமணியன் 'சொல்லிய சொல்லானே சொல்லப்பட்ட அடியின்கண் சொல்லியது சிறக்க நிற்றல்" என்பார் (தொல்காப்பியம்

தெளிவுரை, நூ.1487). ஏந்தல் என்னும் சொல்லுக்கு மிகுதல் என்று பொருள். ஒரு சொல்லே மிக்குவருதலை ஏந்தல் வண்ணம் என்கிறார் பேராசிரியர். திருக்குறளில் ஒரு சொல்லே மிகுந்து வருகின்றதன் அடிப்படையில் ஏந்தல் வண்ணத்திற்குரிய சான்றினைச் சுட்டலாம்.

(எ - டு) *பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று.* *(குறள். 297)*

இக்குறள்வெண்பாவில் 'பொய்யாமை', 'செய்யாமை' என்னும் சொற்கள் இரண்டுமுறை பயின்று வந்து சிறக்க நிற்றலால் ஏந்தல் வண்ணம்.

**முடிவுரை**

தமிழில் வண்ணங்கள் குறித்து இலக்கண நூல்கள், உரைகளில் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. வண்ணங்கள் இருபது என்பார் தொல்காப்பியர். பிற இலக்கணிகளும் உரைகளும் நூறு என்று வரையறுக்கின்றன. இவ்வாறு வண்ணங்கள் பற்றி இருநிலைப்பட்ட கருத்துகள் இருந்தபோதும், திருக்குறளில் தொல்காப்பியர் கூறும் 20 வண்ணங்களில் தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், ஏந்தல் வண்ணம் ஆகிய 16 வண்ணங்கள் பயின்று வந்துள்ளன. நான்கு வண்ணங்கள் பயின்றுவரவில்லை. ஒட்டுமொத்தமாக ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் தொகுத்து தொல்காப்பியர் கூறும் வண்ணங்களை ஆராய வாய்ப்பு மிகுதியாக உள்ளது. அவற்றைத் தனியே ஓர் ஆய்வாக முன்னெடுக்கலாம். அவை பிறிதொரு சூழலில் விரிவாக ஆராயப்படும்.

**துணைநூற் பட்டியல்**


அமிர்தசாகரனார் & வேணுகோபாலப்பிள்ளை, மே. வீ. (ப.ஆ.). (1973). *யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன்.* **(**மறுபதிப்பு**).**சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

அவிநயனார். (உரை) & அறவாணன், க.ப. (ப.ஆ.). (1975). *அவிநய மூலமும் உரையும்.* (முதற் பதிப்பு).சென்னை: ஜைன இளைஞர் மன்றம்.

சண்முகம் பிள்ளை, மு. (1971). *திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும்.* (முதற்பதிப்பு). சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம்.

தாமோதரன், அ. (1970). *திருக்குறள் மேற்கோள் விளக்கம்.* (முதற்பதிப்பு). ஜெர்மனி: தெற்காசியக் கழகம், ஹைடல்பர்க் பல்கலைக்கழகம்.

திருஞானசம்பந்தம்,ப. (2015). *பதினெண்கீழ்க்கணக்கின் யாப்பமைதி.* சென்னை: சந்தியா பதிப்பகம்.

திருவள்ளுவ நாயனார். (1904). *திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்.* (ஆறாம் பதிப்பு). சென்னை: பொன்னுசாமித் தேவர் வேண்டு கோளின்படி, ஆறுமுக நாவலர் பல பிரதிரூபங்களைப் பரிசோதித்து, சதாசிவப் பிள்ளையால் வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டன.

தொல்காப்பியர். (1989). *தொல்காப்பியம் செய்யுளியல் உரை வளம்*, க.வெள்ளைவாரணன் (ப.ஆ.). (முதற்பதிப்பு).மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

பழநியாண்டி, ஆ. (2007).*தொல்காப்பிய வண்ணங்கள்.* (முதற்பதிப்பு). சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.

பிச்சை, அ. (2011). *சங்க இலக்கிய யாப்பியல்.* (முதற்பதிப்பு). சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

மோகனராசு, கு. (1980). *தமிழ் யாப்பு சில புதிய கோணங்கள்*. (முதற்பதிப்பு). சென்னை: வள்ளுவர் கழகம்.